DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC66/2020

Prosecution witness – PW.4

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர். S. பரமசிவம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition u/s.317 Cr.P.C. filed and allowed)

**13.06.2024 – 02.05 PM**

முதல் விசாரணை

1. நான் தற்சமயம் போகலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் கடந்த 05.03.2020 ம் தேதியன்று இரவு 11.30 மணியளவில் கடலாடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது ஏ புனவாசல் கிராமத்தை சேர்ந்த வில்வத்துரை என்பவரின் மனைவி முத்துலெட்சுமி என்பவர் சிசிச்சைக்கு அவரது தாயாரால் அழைத்து வரப்பட்டார்.

3. நான் அவரை விசாரித்தபோது அவர் தன்னை தனது கணவர் அன்றையதினம் இரவு 10.00 மணியளவில் வீட்டில் வைத்து அருவாளால் தாக்கியதாக கூறினார்.

4. நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அனுப்பி வைத்தேன். அங்கு சிகிச்சை பெற்ற மருத்துவ குறிப்புகளுடன் என்னிடம் ஆஜரானவரை அவருக்கு வழங்கப்பட்ட மருத்துவ குறிப்பை பார்வையிட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம்

என சான்று வழங்கினேன். நான் அவருக்கு வழங்கிய காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆகும்.

5. அதே சம்பவத்தில் காயம்பட்டதாக மாரியம்மாள் என்பவர் என்னிடம் உறவினர் உதவியுடன் சிகிச்சைக்காக வந்தார்.

6. நான் அவரை விசாரித்தபோது அவர் தன்னை தனது மருமகன் அன்றையதினம் இரவு 10.00 மணியளவில் வீட்டில் வைத்து அருவாளால் தாக்கியதாக கூறினார்.

7. நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தேன். நான் அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என சான்று வழங்கினேன். நான் அவருக்கு வழங்கிய காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆகும். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 06.03.2020 ம் தேதியன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். எந்த நிலை காவலர் என்னை விசாரணை செய்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அதன்பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் தெரிவித்தேன்.

3. நான் காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்டதாக கூறப்பட்ட காயங்கள் கரடுமுரடான பாதைகளில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தவறி கீழே விழும்பட்சத்தில் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.